# DEPOSITION OF WITNESS

## IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| **C.C.No. 110/2021, Mangalamedu P.S. PW -1.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரவின்குமார் | Caste | : | - |
| Father/ Husband Name | : | ஜேம்ஸ்ராஜ் | Calling | : | பிரைவேட் |
| Village | : | ஆவடி, சென்னை | Religion | : | - |
| Taluk | : | சென்னை | Age | : | 29/2023 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 21.09.2023. | | | | | |

Accused absent,

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :-

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன் . 15.03.2017 ம் வருடம் எங்களது சித்தப்பாவிற்கு சொந்தமான காரில் எனது அப்பா ஜேம்ஸ்ராஜ் , அம்மா மகாலெட்சுமி, சித்தப்பா சௌரிராஜன், சித்தி ஜூலி , அத்தை சர்மிளா ஆகியோர் சென்னையிலிருந்து தஞ்சாவூர் செல்வதற்காக சென்றுகொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு பின்னால் மற்றொரு காரில் சென்று கொண்டிருந்தேன் . மங்களமேடு தாண்டி வாலிகண்டபுரம் பிரிஜை தாண்டி கருப்பையா கோவில் அருகே சென்றபோது காலை 11.30 மணிக்கு டிப்பர் லாரி ஒன்று இன்டிகேட்டர் போடாமல் திரும்பியதால் எனது தந்தை சென்ற வாகனம் மேற்படி டிப்பர் லாரியின் மீது மோதிவிட்டது . மேற்படி டிப்பர் லாரியின் பதிவு எண் . TN 33 AW 1859 ஆகும். எனது சித்தப்பாவுடைய காரின் பதிவு எண் . TN 20 BL 6959 ஆகும். டிப்பர் லாரியை ஓட்டி வந்தவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே எனது அப்பாவும் , சித்தாப்பாவும் தலையில் அடிப்பட்டு இறந்துவிட்டார்கள் . எனது அம்மா , சித்தி, அத்தை ஆகியோர்களை 108 ஆம்புலன்ஸ் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் . நாங்கள் மருத்துவமனைக்கு செல்வதற்குள் எனது அத்தையும் இறந்துவிட்டார் . பின்னர் எனது அம்மாவையும், சித்தியையும் திருச்சி அரசு மருத்துவமனைக்கு மாற்றினார்கள். சிகிச்சை பலனின்றி எனது அம்மாவும் இறந்துவிட்டார் . மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நான் காவல்நிலையத்தில் புகார்

கொடுத்தேன். (புகார்தாரரால் கொடுக்கப்பட்ட புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :–

இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.
District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DEPOSITION OF WITNESS

IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM

| C.C.No. 110/2021, Mangalamedu P.S. PW -2. | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கிங்ஸ்டன் | Caste | : | - |
| Father/ Husband Name | : | பாக்கியராஜ் | Calling | : | Medical Billing |
| Village | : | ஆவடி, சென்னை | Religion | : | - |
| Taluk | : | குன்னம் | Age | : | 23/2023 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 21.09.2023. | | | | | |

Accused absent.

**அரசு தரப்பு முதல் விசாரணை** :-

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து Medical Billing–ல் வேலை செய்து வருகிறேன் . 15.03.2017 ம் தேதி காலை 07.00 மணிக்கு சென்னையிலிருந்து தஞ்சாவூர் செல்வதற்காக காரில் வந்து கொண்டிருந்தோம். காரில் நான் , எனது சின்ன அண்ணன் , பெரிய அண்ணன் மற்றும் எனது பெரியப்பா ஆகியோர் வந்து கொண்டிருந்தோம் . எங்களுக்கு முன்னால் மற்றொரு காரில் எனது பெரியப்பா , பெரியம்மா, சித்தப்பா, சித்தி மற்றும் அத்தை ஆகியோர் சென்று கொண்டிருந்தார்கள் . அந்த காரின் பதிவு எண் . TN 20 BL 6959 ஆகும். அந்த கார் பெரம்பலூர் அருகே கருப்பையா கோவிலுக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது முன்னால் சென்று கொண்டிருந்த டிப்பர் லாரி எதிர்பாராத விதமாக வலது புறமாக திரும்பியது. இதனால் எனது பெரியப்பா பயணம் செய்த கார் மேற்படி டிப்பர் லாரியின் மீது மோதிவிட்டது . இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே எனது பெரியப்பாவும் , சித்தாப்பாவும் தலையில் அடிப்பட்டு இறந்துவிட்டார்கள். எனது பெரியம்மா, சித்தி, அத்தை ஆகியோர்களை 108 ஆம்புலன்ஸ் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நாங்கள் மருத்துவமனைக்கு செல்வதற்குள் எனது அத்தையும் இறந்துவிட்டார் . பின்னர் எனது பெரியம்மாவையும் , சித்தியையும் திருச்சி அரசு மருத்துவமனைக்கு மாற்றினார்கள் . சிகிச்சை பலனின்றி எனது பெரியம்மாவும் இறந்துவிட்டார் . இதுசம்மந்தமாக எனது அண்ணன் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :–**

**இல்லை.**

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.